DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 38/2024 Crime No. /2019 Station

| Name | PW-4 - சசிதரண் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.04.2025 |

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை-**

நான் பவானியில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரிக் கடை வைத்துள்ளேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ,தேதி மாதம் நினைவில்லை கடந்த 1 ஆண்டிற்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 07.00 மணியளவில் நான் எனது கடை முன்னால் நின்று கொண்டிருந்தபோத/ இரண்டு நபர்கள் பைக்கில் வந்தார்கள் அதில் பைக்கை ஓட்டி வந்தவர் ஹெல்மெட் அணிந்திருந்தார். எனது கடைக்கு பக்கத்தில் பைக்கை நிறுத்திவிட்டு பின்னால் அமர்ந்து வந்த நபர் உள்ளே குறுக்கு சாலையில் சென்றார். சிறிது நேரம் கழித்து அந்த நபர் வேகமாக வந்து பைக்கில் ஏறி சென்று விட்டார். பின்னால் வந்த ஒரு அம்மா திருடன் திருடன் என கத்திக் கொண்டு வந்தார். அவரது செயினை அந்த நபர் பறித்துக் கொண்டு செல்வதாக கூறினார். நானும் பைக்கை எடுத்துக் கொண்டு அந்த நபர்களை கொஞ்ச நேரம் துரத்திச் சென்றேன். ஆனால் அவர்களை பிடிக்க முடியவில்லை. அந்த இரண்டு நபர்களை எனக்கு சரியாக அடையாளம் தெரியாது. சம்பவம் நடைபெற்ற நேரம் இரவு நேரம் என்பதாலும், அதில் ஒருவர் ஹெல்மெட் அணிந்திருந்தாலும், அன்றைய தினம் நான் அவர்களை சரியாக பார்க்க முடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணை சொன்ன சங்கதிகளை தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால், சரியல்ல. அன்றைய தினம் என்னால் எதிரிகளை அடையாளம் காட்ட முடிந்தது. தற்போது ஞாபகம் இல்லை. சம்பவத்தை கேள்விப்பட்டு தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். நீங்கள் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் எவ்வித சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல .

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 38/2024 Crime No. /2019 Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5- அசோக்குமார் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.04.2025 |

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை-**

நான் குருப்பநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு கட்டப்பை தயாரிக்கும் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 1 ஆண்டிற்கு முன்பு ஒருநாள் காலையில் நான் பவானி ஹோண்டா ஷோ ரூம் அருகே இருந்தபோது அங்கு வந்த போலீசார் அங்கு நடைபெற்ற திருட்டு சம்பவம் தொடர்பாக விசாரித்து படம் வரைந்து கொண்டு இருந்தார்கள். சாட்சியாக என்னை கையொப்பம் செய்ய சொன்னார்கள். அதில் பார்வை மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னிடம் 4-5 தாள்களின் கையெழுத்து வாங்கினார்கள் என்றால், சரிதான். எதற்காக அந்த கையொப்பம் செய்தேன் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.